
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1316

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

## கோவி.லெனின்

127

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# பா.ஜ.க.வை நகலெடுக்கும் கூலிப்படை!

***சட்டமன்றத்தில் விஜய் வைத்த குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்க, தி.மு.க.வினருக்கு வாய்ப்பளிக்காமல், அவர்களை வெளியேற்றி விட்டு, அவசர அவசரமாக மசோதாக்களை நிறைவேற்றியுள்ளதே த.வெ.க. அரசு?***

ஒன்றியத்தில், பா.ஜ.க. ஆட்சி நடைபெறுகிறது. பா.ஜ.க. அரசை நோக்கி எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்டால், அதற்குரிய பதில் எதுவும் சொல்லாமல், இந்தியாவின் முதல் பிரதமர் நேரு மீதும் காங்கிரஸ் கட்சி மீதும் குற்றம் சாட்டுவது, கடந்த 12 ஆண்டுகளாகத் தொடர்கிறது. அதே வழியைத் தமிழ்நாட்டில் கடந்த 100 நாட்களாகப் பின்பற்றுகிறது, த.வெ.க. அரசு. எந்தக் கேள்வி கேட்டாலும் விஜய்யும் த.வெ.க. அமைச்சர்களும் தி.மு.க. மீதும் முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் கழகத் தலைவர், திராவிட நாயகர் ஆகியோர் மீதும் குற்றம் சாட்டி, திசைதிருப்பும் வேலையை த.வெ.க. அரசு தொடர்ந்து செய்துவருகிறது.

பொய்க் குற்றச்சாட்டுகளுக்கும் அவதூறுகளுக்கும் பதிலளிக்க, எதிர்க்கட்சிக்கு சபாநாயகர் வாய்ப்பளிப்பதில்லை. அவைக் காவலர்களைக் கொண்டு தி.மு.க. உறுப்பினர்கள், பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனநாயக அவலமும் நடைபெற்றது.

முதன்மையான எதிர்க்கட்சியைச் சட்ட மன்றத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாளன்று, 11 மசோதாக்களை அவசர அவசரமாக நிறைவேற்றியிருக்கிறது, த.வெ.க. அரசு. அதில் முக்கியமானது, தனியார் பல்கலைக்கழகம் தொடங்குவதற்குத் தேவையான நிலத்தின் அளவையும், நிரந்தர நிதியின் அளவையும் குறைக்கும் மசோதா ஆகும். இதன்மூலம் கல்வியைத் தனியார்மயமாக்கும் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கைக்குத் தமிழ்நாட்டில் மறைமுகமாக வழிவகுத்துள்ளது, விஜய் அரசு.

புதிய கல்விக் கொள்கையை எதிர்ப்பதாகக் கூறும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் தான், இந்த மசோதாவைத் தாக்கல்செய்து நிறைவேற்றியுள்ளார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், புதிய கல்விக் கொள்கைக்குப் பின்பக்க வாசலைத் திறந்துவிடும் இந்த மசோதாவை ஆதரித்து நிறைவேற்றியுள்ளது. வெளியிலிருந்து அரசுக்கு ஆதரவு தரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பேரவையில் இல்லாத நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், எதிர்க்கட்சி வரிசையில் உள்ள பா.ம.க.வும், கல்வியை வணிகமயமாக்கத் துணைபோகும் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசியும், பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. வெளியேற்றப்பட்ட சபையில், தனக்கிருந்த ஆதரவுமூலம் த.வெ.க. அரசு நிறைவேற்றிவிட்டது.




‘அடுத்த பிறவியில் விவசாயியாகப் பிறக்க ஆசை’ என்றும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உதவும் பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை, விவசாய நிலங்களைக் காட்டி ரத்துசெய்வதாக ‘பஞ்ச் டயலாக்’ விட்டவருமான விஜய்யின் ஆட்சியில், விவசாய நிலங்களை வேறு திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு இனிமேல் மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவையில்லை என்ற மசோதாவை நிறைவேற்றி, இரட்டை வேடம் போட்டுள்ளது, விஜய் அரசு. அரசினர் தனித் தீர்மானங்கள் என்ற பெயரில், ஏற்கெனவே தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட ‘நீட்’ எதிர்ப்புத் தீர்மானம்’, ‘தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதல் இடம் தரும் தீர்மானம்’, ‘உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழ் இடம்பெற வேண்டும் என்ற தீர்மானம்’, ‘தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற தீர்மானம்’ எனப் பழைய தீர்மானங்களையே நிறைவேற்றி, அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெற்ற த.வெ.க. அரசு, தமிழ்நாட்டின் நலன்கள் பாதிக்கும் மசோதாக்களை, எதிர்க்கட்சியை வெளியேற்றி விட்டு நிறைவேற்றியுள்ளது.

ஒன்றியத்தில் பா.ஜ.க. அரசு, எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களை சஸ்பெண்ட் செய்துவிட்டு, இதே போல பல மசோதாக்களை நிறைவேற்றியிருப்பதைப் பலரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில், பா.ஜ.க.வின் கூலிப்படை போல விஜய் அரசு தமிழ்நாட்டில் செயல்பட்டுவருகிறது.

**...வினா தொடரும்.**

## தொகுதி மறுவரையறை விவகாரம் - சிறப்புக் கருத்தரங்கம்!



இந்திய அரசியலமைப்பு உறுதிப்படுத்தியுள்ள கூட்டாட்சி சமநிலையைச் சிதைத்துக்கொண்டு இருக்கிறது, ஒன்றிய பா.ஜ.க. அரசு. குறிப்பாக, தொகுதி மறுவரையறை என்கிற பெயரில், தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையில் எடுத்த முயற்சியைக் கழகத்தின் கடுமையான எதிர்ப்புகள் காரணமாகத் தற்போது நிறுத்திவைக்கப்பட்டதை அறிவோம்.

இப்படியான சூழலில், சென்னையில் ‘தொகுதி மறுவரையறையும் கூட்டாட்சி சமநிலையும்’ என்கிற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. சமூக அறிவியல் பேரவை சார்பில் செப்டம்பர் 12, சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, கவிக்கோ மன்றத்தில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. மூத்த பேராசிரியர் அ.கருணானந்தன் தலைமையில், ஓய்வுபெற்ற இ.ஆ.ப. அதிகாரியும், தமிழ்நாடு அரசு அமைத்துள்ள ‘ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின்’ உறுப்பினருமான கே.அசோக்வர்தன் ஷெட்டி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான அதிகாரப் பகிர்வை விரிவாக ஆராய, நம் கழக அரசால் அமைக்கப்பட்ட ‘ஒன்றிய-மாநில உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், இந்தச் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டின் கூட்டாட்சி உரிமைகளை உரக்கப் பேசும் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக அமையவுள்ளது. ஆட்சியில் இருப்போர், மக்களை ஏமாற்றும் எத்தர்களாக நாடகம் நடத்தலாம். ஆனால், மாநில உரிமை விவகாரத்தில், கழகத்தின் வழிகாட்டுதலே இந்தியாவை வழிநடத்தும். அதைச் சொல்லும் இந்த அரங்கமும்.

# வலை யோசை



**Iyan Karthikeyan**

மிசா பற்றிய வதந்திகளைத் தொடங்கியவர்கள் சங்கிகள். மாரிதாஸ் உள்ளிட்டவர்கள் பச்சைப் பொய்யைப் பரப்பினர்.

எமர்ஜென்சியில் சங்கிகளும் பாதிக்கப்பட்டனர்.

தமிழ்நாடுதான் அடைக்கலம் தந்தது. கலைஞர் அரண் அமைத்தார்.

JP போன்ற உன்னதத் தலைவர்களுக்கு நம்பிக்கை அளித்தது தமிழ்நாடு.

இவை எல்லாம் தெரிந்தும் பொய்யைப் பரப்பினர்.

இப்போது சுற்றும் எல்லா ஆதாரங்களையும் அப்போதே வெளியிட்டுப் பேசி முடித்தாகிவிட்டது.

இப்போது அதை த.வெ.க. கையில் எடுத்து, இதோ ஆதாரம் என கையில் எடுத்ததும் சங்கிகளின் புரட்டுதான். பாத்தியா பாத்தியானு. உங்களுக்கு புதுசா கிடைச்ச கழிவுடா அது. அத வச்சு நீங்க மகிழலாம்..

அதில் ஒண்ணக் கவ்விகிட்டு காங்கிரஸ்ல ஒண்ணு கிளம்பியிருக்கு.

சங்கி வழியில் த.வெ.க. கூட புரியுது. சங்கி அமைச்சர் அதத்தான தர முடியும். (காக்கா பிரியாணி துண்ணா பின்ன உன்னிகிருஷ்ணன் குரலா வரும்)

ஜென்மத்துக்கும் நீங்க தேற மாட்டிங்க..

தலையெழுத்து..

ஆடி முடிங்க...



**P.murugadossmahesh@gmail.com**

பட்டினப்பாக்கத்தில் புதிய சட்டசபை. Loop சாலையில் இனி மீன் விற்க முடியாது. மீனவர்கள் வாழ்வாதாரம் காலி. மகோரா காலத்தில் மீனவர்கள் இருப்பிடங்களைக் காலி செய்ய துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டது. இப்போது வரலாறு திரும்புகிறது. திரைக் கவர்ச்சியில் வீழ்ந்த தமிழினம், திரும்ப அனுபவிக்கப்போகிறது.

Meanwhile fisher women's vijay anna cute la.






**Pa Prem**

Pa Prem
16h · Vetri Kodi Yettru · Mani Sharma, Ranjith Govind, Mukesh

பட்டினம்பாக்கத்தில் 20 லட்சம் சதுர அடியில் புதிய தலைமைச் செயலகம்..

~ பட்டினம்பாக்கம் மீனவர் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதி. மீன் பிடி தொழிலையும், மீன் வியாபரத்தையும் நம்பி வாழும் விளிம்புநிலை மக்கள் வசிக்கும் பகுதி.

விஜய்க்கு sea view ஆபீஸ் வேண்டும் என்பதற்காக, பட்டினம்பாக்கம் மக்களிடம் இருந்து 20 லட்சம் சதுர அடியை பிடுங்க போகிறார்கள்.

அதோடு முடியுமா?? பாதுகாப்பு காரணம் காட்டி அங்கிருக்கிற மக்களை அப்புறப்படுத்துவார்கள். மீன் வாடை அடிக்கிறது என்று அப்புறப்படுத்துவார்கள்.

சந்தோசமா இருங்க மக்களே ❤️



126 · 6 comments 31 shares

Like Comment

**Sukirtha Rani**
கடல் பார்த்த ஆபிஸ்தான் வாஸ்துன்னு எந்த ஜோசியக்காரன் சொன்னான்னு தெரியலையே?
15h · 7

**Ran Zith Rockzz**
எங்க அண்ணனுக்காக நடுத்தெருவில் வசிக்க மாட்டோமான்னு சொன்னாலும் சொல்லுவாங்க நமக்கு எதுக்கு வம்பு
16h · 5

**Bala Yogaraja**
விசில் ஊது
15h

# ப்ளாஷ்பேக்



சிபி அர்சித் திருமலைசாமி



## கழகப் பணியின் வேர்!

எனது இளவயது காலத்தில், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், பொள்ளாச்சி நிகழ்ச்சிக்கு வருகைதந்திருந்தார். ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியின்போது, எனது மாமா, கோவை தெற்கு மாவட்டப் பொதுக்குழு உறுப்பினராக இருக்கும் எஸ்.ஜெயக்குமார் அவர்கள், தலைவரைக் காண அழைத்துச்சென்றார். அப்போது, தலைவருக்குப் பொன்னாடை அணிவித்தபோது எடுத்த படம். இப்போதும் எனது கழகப் பணிக்கு வேர் என்று நான் நினைக்கும் படம்.

**- சிபி அர்சித் திருமலைசாமி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## அண்ணா நகர் வேட்பாளர்!

1980-ஆம் ஆண்டு, கழகத்தின் தேர்தல் சிறப்பு மாநாடு வடபழனியில் நடைபெற்றது. அந்த மாநாட்டில், கழக வேட்பாளர்களின் முதல் பட்டியலை வெளியிட்டார், கலைஞர். அந்தப் பட்டியலில், அண்ணா நகர் வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படவில்லை. படிக்கும்போது, கலைஞர் பெயர் வேட்பாளராக அறிவிக்கப்படவில்லை என்பதால், தொண்டர்கள், “அண்ணா நகர்.. அண்ணா நகர்!” என்று குரல் எழுப்பினர். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் அந்தத் தொகுதி, பின்னர் அறிவிக்கப்படும் என்றார் கலைஞர். அதன் பின்னர், இரண்டாவது பட்டியலில்தான் கலைஞர் பெயர் அறிவிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900